# இச்சையினால் தொடரும் பாவங்கள்



ஆசிரியர் A. பால்ராஜ்



## எங்களுடைய வெளியீடுகள் ..

1. பரம குயவனின் பாத்திரங்கள் (சிறுவர் ஊழிய கதைகள்)
2. பாவத்தின் கொடிய வலையும் அதிலிருந்து விடுதலையும்
3. நான் தேடும் மனிதன் நீ தான் - இயேசு
4. சின்னப்பூக்கள் (சிறுவர் பாடல்கள் ACD)
5. ஜெபக்குறிப்புகள் - 100 (ஜெபக் கையேடு)
6. பரலோகத்தின் திறவுகோல்கள் (வாக்குத்தத்தங்கள் 250)
7. கர்த்தரின் யுத்தங்கள்
8. பாவத்தின் மூலம் வரும் சாபமும் அதின் முடிவும்

நாங்கள் சுவிசேஷ அக்கினி என்ற பெயரில் ஜெப சுற்றறிக்கை பிரதி மாதம் ஒருமுறை வெளியிடுகிறோம். இது வேதாகமத்திற்குள் வைத்து தினமும் படித்து ஜெபிக்கிறதுக்கு ஏதுவாக சிறிய அளவே இருக்கும். உங்களுக்கு இது தேவனோடு உறவாடுவதற்கு மிக பிரயோஜனமாகவும், ஜெபிக்க பழகவும் பிரயோஜனமாக இருக்கும். இந்த ஜெப சுற்றறிக்கை வேண்டுவோர் எங்கள் முகவரிக்கு தங்களுடைய விலாசத்தை எழுதி அனுப்பினால் நாங்கள் உங்களுக்கு தொடர்ந்து அனுப்பி வைப்போம்.


சகோ. A. பால்ராஜ்

**GOSPEL MISSIONARY PRAYER FELLOWSHIP**

**சுவிசேஷ மிஷினெரி ஜெப ஐக்கியம்**

5/110, சாமிபுரம் காலனி, சிவகாசி கிழக்கு - 626 189.

விருதுநகர் மாவட்டம், (த.நா) தென் இந்தியா, செல் : 94431 78673

*Web : www.gospelfellow.com*

*e-mail : gospelfellowsvks@gmail.com*

# பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1 | கீழ்ப்படியாமையின் பாவம் | 1 |
| 2 | பொறாமையினால் வரும் பாவம் | 4 |
| 3 | கண்களின் இச்சை | 7 |
| 4 | முறை தவறிய இச்சை | 12 |
| 5 | பின் மாற்றத்தைக் கொண்டுவரும் பிசாசு | 16 |
| 6 | பிசாசை எதிர்கொள்ளும் ஆவிக்குரிய பட்டயம் | 20 |
| 7 | இயேசுவின் வருகையை எதிர்கொள்ளும் விசுவாசத்தின் இரகசியம் | 28 |
| 8 | முடிவுரை | 33 |

# என்னுரை

பிரியமானவர்களே, ஒரு மனுஷனானாலும், மனுஷியானாலும் அவர்களைத் தன் பக்கம் இழுப்பதற்கு சாத்தான் பயன்படுத்தும் ஆயுதம் இச்சை. இதைக்காட்டியே சாத்தான் மனித சமுதாயத்தின் ஓட்டத்தைத் துவக்கி அவர்களை நித்திய நரகத்தில் தள்ளி அழிவுக்கு அனுப்புகிறான்.

ஆனால், இயேசு கிறிஸ்து: எல்லா ஆத்துமாவும் என்னுடையவைகள் என்றும் ஒவ்வொரு ஆத்துமாவுக்காகவும் சிலுவையிலே சிந்திய இரத்தத்தின் மூலம் கிரையம் செலுத்திவிட்டேன் என்பதை அறியாமல், பாவத்தின் பிடியிலிருந்து விடுபடமுடியவில்லையே என்று தவிக்கிற ஒவ்வொருவரையும் பார்த்து "வருத்தப்பட்டு பாரஞ்சுமக் கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று அழைக்கிறார். வாருங்கள், எல்லாம் ஆயுத்தமாயிருக் கிறதென்றும் சொல்லுகிறார்.

இச்சையின் ஆசையைக் காட்டி நித்திய அக்கினியில் தள்ளக் காத்திருக்கும் சாத்தானின் பிடியிலிருந்து விடுபட வழிகாட்டவே, **இச்சையினால் தொடரும் பாவங்கள்** என்ற இந்தச் சிறிய புஸ்தகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தப் புஸ்தகத்திற்கு அணிந்துரை எழுதித்தர ஜெபித்து கர்த்தரை நோக்கி நாங்கள் காத்திருந்தபோது உலகிற்கு வார்த்தை ஊழியங்கள், ஸ்தாபகர் சகோ.அகஸ்டின் ஆசீர் அவர்களிடம் தொடர்பு கொள்ளும்படி நடத்தினார். சகோதரர் அவர்களும் எங்கள் ஊழியங்களை நேசித்து உடனே அணிந்துரை எழுதித்தந்தார்கள். கர்த்தர் அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் உடன் ஊழியர்களையும், ஊழியங்களையும் இம்மையிலும் மறுமையிலும் நூறத்தனையாய் ஆசீர்வதிப்பாராக. மேலும், இந்தப் புஸ்தகம் வெளியிட பலர் ஜெபித்தார்கள், பலர் கொடுத்தார்கள், இன்னும் பலர் உதவினார்கள். அவர்களையும் கர்த்தர் இம்மையிலும் மறுமையிலும் நூறத்தனையாய் ஆசீர்வதிப்பாராக!.

கிறிஸ்துவின் பணியில்,
உங்கள் சகோதரன்
**A.பால்ராஜ்**

... உங்கள் பாவம் உங்களைத்
தொடர்ந்து பிடிக்கும் ... (எண். 32:23)

# 1. கீழ்ப்படியாமையின் பாவம்

**“... உங்கள்  பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்...” (எண். 32:23)**

ஆதியிலே தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து உருவாக்கி தம்மைத் தொழுது கொள்ளவும், அவருக்கு ஆராதனை செய்து அவரைப் புகழ்ந்து போற்றி துதி செய்து அவரை மகிமைப்படுத்தி அவருடைய கரத்தின் கிரியைகளைப் பார்த்து அவர்கள் அதை வர்ணித்து அவரை மேன்மைப்படுத்தி அவருடைய வார்த்தையின் வல்லமையை அறியவும், உணரவும் அவருடைய அளவில்லா ஞானத்தின் கற்பனையினால் தன்னால் சிருஷ்டிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட முதல் குடும்பம் தன்னை நேசிக்க வேண்டும் என்று விரும்பி தன் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவார்களோ என்று சோதித்து அறிய தேவன் விரும்பினார்.

ஆனால் அவர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல் சாத்தானின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தபடியினால் தேவ அன்பு அவர்களிடமிருந்து எடுபட்டு போயிற்று. தேவனின் வார்த்தைகளைத் தள்ளி சாத்தானின் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து கீழ்ப் படிந்ததே முதல் பாவமாயிற்று.

**‘‘... இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும்,  பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்’’ (யாக். 1:15) என்று வேதம் சொல்லுகிறது.**

ஒரு ஸ்திரீயின் கர்ப்பத்தில் குழந்தையானது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து முழு வளர்ச்சியடைந்த பின் பிரசவிக்கிறது போலவே, பிறர்

சொல்லும் பாவ வார்த்தைகள் உருவமாக மாறி முழுமையடைந்து நம்முடைய மனம் பாவத்தை கர்ப்பம் தரிக்கும் இடமாக மாறி பின்பு பாவத்தைப் பிறப்பிக்கிறது. பாவ காரியங்களை மனதில் வைத்து யோசிக்க, யோசிக்க நம்முடைய உள்ளான மனிதனாகிய ஜீவ ஆத்துமா மரணத்தை தழுவுகிறது. பின்பு ஆத்துமா மரித்து விடுகிறது.

ஆத்துமா மரித்த மனிதனை பாவம் தொடர்கிறது. சாத்தான் எப்பொழுதும் செத்த ஆத்துமாவுக்குள் இருந்து கொண்டு பாவங்களைச் செய்யத் தூண்டிக் கொண்டேயிருப்பான். ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படி யாமையினால் பாவம் செய்தபோது அத்தியிலை களைத் தைத்து தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டாக்கி, தங்களுடைய நிர்வாணத்தை மூடிக் கொண்டார்கள்.

ஆதாம், ஏவாள் இருவரும் அத்தியிலையினால் தங்களுடைய நிர்வாணத்தை மூடிமறைத்து தங்களுடைய சுய நீதியை நம்பினார்கள். ஆனால் தேவனுக்கு முன்பாக சகலமும் நிர்வாணமும் வெளியரங்கமாயிருக்கிறதென்று வேதம் சொல்லுகிறது. ஆகையால் நம்முடைய சுய நீதியினால் நம்முடைய பாவங்கள் மூடப்படும் என்று நாம் தவறான எண்ணம் கொள்ளும்படி சாத்தான் நம்முடைய மனதை திருப்தியடையும்படி செய்கிறான்.

இன்று உலகத்தில் பல மதங்கள், பல தெய்வ வழிபாடுகள் இருக்கிறது. எல்லா ஜனங்களின் மனதும் தங்களை சிருஷ்டித்த கடவுளைத் தேடுகிறது. சிலர் தங்களுடைய தாய் தகப்பனை தெய்வமாக வணங்கு கிறார்கள். அவர்களின் நம்பிக்கை மனிதன் மரித்த பின்பு கடவுளாக மாறிவிடுகிறான் என்பதே!

**மனிதனைக் குறித்து வேதம் சொல்லுகிறது : "... ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபி. 9:27) என்று வேதம் நமக்கு போதிக்கிறது.**

மனிதன் ஒருபோதும் தெய்வமாய் மாறமுடியாது. தேவனுக்கு முன்பாக நியாயத்தீர்ப்புக்கு ஏதுவா யிருக்கும் மனிதன் எப்படி தெய்வமாய் மாறமுடியும். பாவம் செய்தவுடன் மனிதன் தேவமகிமையை இழந்து ஆவிக்குரிய நிர்வாணியாகிறான். பரலோகத்தில் ஆவிக்குரிய நிர்வாணத்துடன் பிரவேசிக்கமுடியாது. பரிசுத்தமில்லாமல் ஒருவரும் தேவனை தரிசிக்க முடியாது என்று வேதம் சொல்லுகிறது.

<u>எச்சரிக்கை</u>

**"மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்". (எரே. 17:5)**

## ௨. பொறாமையினால் வரும் பாவம்

ஆதாமும், ஏவாளும் செய்த பாவம் அவர்களுடன் முடிந்து போகவில்லை. அது தொடர்ந்தது. வேதத்தில் ஆதாமின் சந்ததியில் காயீன், ஆபேல் வாழ்க்கையைக் குறித்து வாசிக்கும் போது: காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான், ஆபேல் மந்தையை மேய்க்கிற வனானான். இரண்டு பேருக்கும் வாழ்வாதாரமாக இரண்டு தொழில்கள் தேவனால் கொடுக்கப்பட்டது என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

**"... ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான்". (ஆதி. 4:2)**

காயீன், ஆபேல் நன்றிபலியாகிய காணிக்கையைக் குறித்தும், இவர்கள் இருவரின் செயல்பாடுகளின் பலன்களைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ள, பரிசுத்த ஆவியானவர் நம்மோடு பேசும்படி நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுப்போம். காயீன் கொண்டு வந்த காணிக்கையானது நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான் என்று வாசிக்கிறோம்.

காயீன் கொண்டு வந்த காணிக்கையான நிலத்தின் கனிகள் தேவ அன்பின் மூலம் படைக்கப்படாமல் பெயரளவுக்கு தேவ சமூகத்தில் கொண்டுவரப்பட்ட தாயிருந்தது. தேவன் அதை விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றைக்கும் தேவ சமூகத்தில் நாம் காணிக்கைகளைக் கொண்டு வரும்போது, தேவன் நமக்குச் செய்த நன்மைகளை நினைவு கூர்ந்து நன்றி பெருக்கினால் நம் உள்ளம் நிறைந்து காணிக்கை களைக் கொண்டு வரவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். வேதம் சொல்லுகிறது:

**“அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்“ . (2 கொரி. 9:7)**

காயீன் கொண்டு வந்த காணிக்கை தேவனுக்கு அருவருப்பாயிருந்தது. அவர் அதை அங்கீகரிக்க வில்லை. ஆபேலின் காணிக்கையைக் குறித்து வேதம் சொல்லுகிறது:

**‘‘ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கை யையும் கர்த்தர் அங்கீகரித்தார்“. (ஆதி. 4:4)**

ஆபேலுக்குள் தேவ அன்பு இருந்தது, விசுவாச மிருந்தது. தேவனுக்கு முதன்மையானதைக் கொடுக்க விருப்பம் இருந்தது. கொடுக்கும்போது அதை பல மடங்கு பெருகப்பண்ணி ஆசீர்வதிப்பார் என்ற விசுவாசமிருந்தது. கர்த்தர் அவன் மனவிருப்பத்தின் படி ஆபேலையும் அவன் கொண்டு வந்த காணிக்கை யையும் ஆசீர்வதித்தார்.

கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கைகளையும் ஆசீர்வதித்ததைப் பரிசுத்த ஆவியானவரின் தொடுதல் மூலமாக காயீன் அறிந்து கொண்டபடியால் அவன் முக நாடி வேறுபட்டது. அவனுக்குள் பொறாமையின் ஆவி கிரியை செய்யத் தொடங்கியது.

**“அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறு பட்டது?“. (ஆதி. 4:6)**

**“நீ நன்மைசெய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; ... என்றார்”. (ஆதி. 4:7)**

காயீனுக்குள்ளிருந்து கிரியை செய்கிற கொலை வெறியின் ஆவியை அறிந்தபடியால் தேவன் அப்படிச் சொன்னார். காயீன் தன் சகோதரனாகிய ஆபேலை கொலை செய்ய சந்தர்ப்பத்தைத் தேடினான். ஏதும் அறியாத ஆபேல் தன் சகோதரனின் வஞ்சகத்தை அறியாமல் வயல் வெளிக்குச் சென்றபொழுது.

**“காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்”. (ஆதி. 4:8)**

<u>**எச்சரிக்கை**</u>

**”தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலை பாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்”. (I யோவான் 3:15)**

## 3. கண்களின் இச்சை

சாத்தான் எப்பொழுதும் நாம் ஒரு பாவத்தைச் செய்தவுடன் அடுத்த பாவத்தைச் செய்ய நம்மைத் தூண்டுவான். லோத்து என்ற தேவ மனிதனைக் குறித்தும், அவனுடைய குடும்பத்தைக் குறித்தும் ஆதியாகமம் பத்தொன்பதாம் அதிகாரம் முழுவதும் பரிசுத்த ஆவியானவரால் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

**“கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ.**

**நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்”. (ஆதி. 12:1,2) என்றார்.**

கர்த்தர் ஆபிரகாமைக் கூப்பிட்டுச் சொல்லும் போது, நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ என்று சொன்னார். ஆனால் ஆபிரகாம் தன் இனத்தைச் சேர்ந்த லோத்தையும் அழைத்துக் கொண்டு போனான்.

லோத்து பொருளாசை நிறைந்தவனும் இவ்வுலகத்தின் இச்சையினால் நிறைந்தவனாயிருந்தான். ஆகையால், தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் நிறைவேற அது தடையாயிருந்தது. ஆகையால் கர்த்தர் அவர்களுக்குள் பிரிவினை உண்டாகும்படி செய்தார்.

**“ஆபிராமுடைய மந்தைமேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தைமேய்ப்பருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று....”.**

**ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர்.**

**இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான்.**

**அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்கும்முன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போவும் இருந்தது.**

**அப்பொழுது லோத்து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும் தெரிந்துகொண்டு, கிழக்கே பிரயாணப் பட்டுப்போனான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிந்தார்கள்”. (ஆதி. 13:7-11)**

இதை ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் நாம் கவனித்தால்: ஆபிரகாம் வாக்குத்தத்தம் நிறைவேற கடந்து போகும்போது பரிசுத்த ஆவியானவர் அவனை நடத்திக்கொண்டு போனார். ஆனால் கூடவே லோத்து மூலமாக சாத்தானின் இச்சையின் ஆவியும் கூடவே சென்றதையும் நாம் கவனிக்க முடிகிறது. ஆகையால்

தான் லோத்தை பிரித்துவிட்டு, கர்த்தர் வாக்குத்தத் தத்தின் நோக்கத்தை ஆபிரகாமுக்குத் தரிசனமாய் காண்பித்தார். அப்படியானால், தேவனால் வாக்குத்தத் தத்தை நாம் பெற்றுக்கொண்ட பின்பு சாத்தானுக்கு நம்முடைய இருதயத்தில் இடங்கொடுத்தால் சாத்தான் நம்மை அவனுடைய கண்ணியில் சிக்கிக்கொள்ளும்படி நடத்துவான்.

நாம் அவனுடைய கண்ணியில் சிக்கிக் கொண்ட பின்பு பரலோகத்திலிருந்து தேவன் கொடுத்த வாக்குத் தத்த ஆசீர்வாதத்தை நாம் சுதந்தரிக்க முடியாதபடி செய்துவிடுவான். பின்பு சாத்தான்: நம்முடன், வாக்குத் தத்தம் பொய், நீ அதை நம்பாதே என்றும்; அது ஆபிரகாம் நாட்களில் நடந்தது, இப்பொழுது அதெல்லாம் நடக்காது என்றும் நம்முடைய விசுவாசத்தை சோர்ந்து போகப்பண்ணுவான்.

இயேசு சொன்னார்: **“சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும்....”. (லூக். 18:1)**

கர்த்தராகிய இயேசுவை நோக்கி ஜெபித்தால் மட்டும் தான் பரிசுத்த ஆவியானவர் சரியாய் நடத்துவார். பிரியமானவர்களே, இஸ்ரவேல் இராஜாக் களின் நாட்களில் நடந்த காரியத்தைப் பாருங்கள்.

**“அப்பொழுது எலியா சகல ஜனத்தண்டைக்கும் வந்து: நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக் குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான், ...”. (I இராஜா. 18:21)**

இருமனமானது கர்த்தருக்கும் நமக்கும் பிரிவினை உண்டாக்கும். யாக்கோபு எழுதின பொதுவான நிருபம் சொல்லுகிறது:

**“இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்ற வனாயிருக்கிறான்”. (யாக். 1:8)**

**“அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதை யாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக” (யாக். 1:7) என்று வாசிக்கிறோம்.**

ஆம், ஆபிரகாம் தேவனால் நடத்தப்பட்டான். லோத்து இச்சையின் ஆவியினால் நடத்தப்பட்டான். ஆகையால், தேவன் இரண்டு பேரையும் பிரிந்து போகப்பண்ணினார். லோத்து தான் குடியிருக்கத் தெரிந்தெடுத்த பட்டணம் பார்வைக்கு மிகச் செழிப்பா யிருந்தது. ஆனால், **“சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்”. (ஆதி. 13:13)** லோத்தும் அவன் குடும்பமும் அதை அறியவில்லை.

சோதோமின் பாவத்தினிமித்தம் அந்தப் பட்டணத்தை அழிக்கத் தேவன் சித்தங்கொண்டார். ஆபிரகாம் கர்த்தரிடத்தில் பண்ணின விண்ணப் பத்தைக் கேட்டு, லோத்தையும் அவன் குடும்பத்தையும் தப்பிப்போகப்பண்ணவும், அந்தப் பட்டணத்தையும் அதிலுள்ள ஜனங்களை அழித்துப்போடவும் தம்முடைய தூதர்களை அனுப்பினார். அவர்கள் லோத்துவிடம் வந்து:

**“நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப் போகிறோம்; இவர்கள் கூக்குரல் கர்த்தருடைய சமுகத்தில் பெரிதா யிருக்கிறது; இதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள்”. (ஆதி. 19:13)**

**“அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர்**

**அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்.**

**அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ. பின்னிட்டுப் பாராதே ; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்". (ஆதி. 19:16,17).**

தாங்கள் விட்டு வந்த ஆடு, மாடு மற்றும் தங்கள் உடைமைகளைப் பார்க்க அவன் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். பிரியமானவர்களே, கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாததினால் வந்த தண்டனையைப் பாருங்கள்.

<u>எச்சரிக்கை</u>

**''எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே, நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும், பெண்கொடுத்தும்,**

**ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக் கொண்டுபோகுமட்டும், உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்". (மத். 24:38, 39)**

## 4. முறை தவறிய இச்சை

அதுமட்டுமல்ல லோத்துவின் இரண்டு குமாரத்திகளும் தங்களுடைய தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக் கொடுத்து அறியாமலும் உணராமலும் இருக்கும் சமயத்தில் தங்களுடைய தகப்பனுடன் சயனித்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**''இவ்விதமாய் லோத்தின் குமாரத்திகள் இருவரும் தங்கள் தகப்பனாலே கர்ப்பவதியானார்கள்.**

**மூத்தவள் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு மோவாப் என்று பேரிட்டாள்; அவன் இந்நாள்வரைக்கும் இருக்கிற மோவாபியருக்குத் தகப்பன்.**

**இளையவளும் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குப் பென்னம்மி என்று பேரிட்டாள்; அவன் இந்நாள் வரைக்கும் இருக்கிற அம்மோன் புத்திரருக்குத் தகப்பன்'' (ஆதி. 19:36-38).**

சோதோம் கொமோரா பட்டணத்தில் கிரியை செய்த விபச்சாரத்தின் ஆவி லோத்தின் குமாரத்திகளையும் விடவில்லை, தங்கள் மனசாட்சியில் பேசிய ஆவியானவரின் குரலுக்கு செவிகொடாமல், சாத்தானின் தூண்டுதலுக்கு கீழ்ப்படிந்து தங்கள் தகப்பனோடு விபச்சாரம் பண்ணி, விபச்சார சந்ததிகளை பெற்றெடுத்தார்கள். அதுவே இன்று பூமியிலே விபச்சாரம் பெருக காரணமாயிற்று. வேதம் சொல்வதை கவனியுங்கள்:

**''அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்**

**போல் விபச்சாரம் பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினியை அடைந்து, திருஷ்டாந்திரமாக வைக்கப்பட்டிருக் கிறார்கள்". (யூதா. 1:7)**

**"ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காம விகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றாகிய ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்க ளாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது". (யூதா. 1:4) என்று வேதம் நமக்கு தெளிவாய்ச் சொல்லுகிறது.**

இப்பொழுது மோவாபியருடைய இச்சையின் ஆவியும், அம்மோனியருடைய இச்சையின் ஆவிகளும் தான் பூமியிலே கிரியை செய்கிறது. ஆகையால் தான் யாக்கோபு மூலமாக ஆவியானவர் இப்படி எழுதி வைத்திருக்கிறார்.

**"விபசாரரே, விபசாரிகளே, உலக சினேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சினேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்". (யாக். 4:4)**

இந்த உலகம் முழுவதும் விபசார ஆவிகளுக்கு அடிமையாய்க் கிடக்கிறது. எனக்கன்பானவர்களே, இப்பொழுது உலகம் முழுவதும் வியாபாரம் பெருக வேண்டுமானால் கவர்ச்சியான விளம்பரங்களை செய்யும் நிலைமையில் உலகம் சென்று கொண்டிருக் கிறது. தொழில்களிலும் இதே நிலைமையத்தான் நாம் பார்க்கிறோம். ஆபீஸ் ரூம்களில் கவர்ச்சியான ஊழியர்கள் பணியிலிருந்தால்தான் அதிக வாடிக்கை யாளர்களை பெருக்க முடியும் என்ற நிலை இருக்கிறது.

இன்னும் தொழிலாளர்கள் அதிகமாய் கூடி வேலை செய்கிற இடங்களில் இந்த இச்சை ஆவி பலமாய் கிரியை செய்து தவறுகளைச் செய்யத்தூண்டி பாவத்தில் தள்ளுகிறது. இதன் மூலம் பல குடும்பங்கள் பிரிந்து கிடக்கிறது. சிலர் சரீரத்தில் நோயினால் பாதிக்கப்பட்டு மரணத்தை சந்திக்கிறார்கள். சிலர் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள். சிலர் அவமானங்களை சுமந்து திரிகிறார்கள். ஜனங்கள் அதிகமாய் கூடும் இடங்களி லெல்லாம் இந்த ஆவிகள் அதிகமாய்க் கிரியை செய்து ஜனங்களை பாவத்தில் தள்ளுகிறது.

ஒரு மனிதன் மனந்திரும்பி இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டவுடன், அவனுடைய ஆத்துமாவுக்குள் இருந்து கிரியை செய்த பிசாசு வெளியேறி விடுகிறான். உடன் இயேசு அந்த ஆத்துமாவுக்குள் பிரவேசித்து அவனுடைய பழைய பாவ சுபாவமாகிய அவனுடைய அசுத்தங்களை சுத்திகரிக்கிறார். இயேசு சொன்னார்:

**“ஆயுதந் தரித்த பலவான் தன் அரமனையைக் காக்கிற போது, அவனுடைய பொருள் பத்திரப்பட்டிருக்கும்.**

**அவனிலும் அதிக பலவான் வந்து, அவனை மேற்கொள் வானேயாகில், அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத் தையும் பறித்துக்கொண்டு, அவனுடைய கொள்ளைப் பொருளைப் பங்கிடுவான்”. (லூக். 11:21,22)**

பலவானாகிய பிசாசு நம்பியிருந்த ஆயுதங்கள் யாவும் மாம்சத்துக்குறியவைகள். இதோ,

**“மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன ; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,**

**விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,**

**பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே". (கலாத். 5:19,20,21)**

இவைகள் மூலமாகத்தான் பிசாசு மனிதனை அடிமைப்படுத்தி இவைகளை விட்டு விலகாதபடி அவனுடைய பொருளாகிய இந்த ஆயுதங்களை ஒவ்வொரு மனிதனுடைய இருதயங்களிலும் பத்திரப் படுத்தி வைத்துக்கொண்டு ஒவ்வொரு ஆத்துமாவையும் ஆண்டு கொண்டுவருகிறான். அவன் மரணத்துக்கு அதிகாரி என்று வேதம் சொல்லுகிறது.

<u>எச்சரிக்கை</u>

**''அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது". (உபா. 23:3)**

## 5. பின் மாற்றத்தைக் கொண்டுவரும் பிசாசு

சாத்தான் கொல்லைப்புற விருந்தாளி. நமக்குக் கவனம் தேவை. மனிதன் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவுடன் அவன் பத்திரப்படுத்தி ஆண்டு கொண்டு வந்த ஆயுதங்களை விட்டுவிட்டு ஓடிப்போகிறான். இதைக் குறித்து ஆவியானவர் தரிசனமாய் ஒரு காரியத்தைக் காண்பித்தார். அதில், நான் சிறிய பாத்திரக்கடை ஒன்றை நடத்தி வருகிறேன். அந்த தரிசனத்தில் என்னுடைய கடையில் நான் வியாபாரம் செய்துகொண்டிருக்கிறேன். நிறைய ஜனங்கள் பாத்திரங்களை வாங்குகிறவர்களும், சிலர் வாங்கிய பாத்திரங்களுக்கு ரூபாய் கொடுக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். என் சிந்தனை முழுவதும் பாத்திரங்களை விற்பதும், விற்ற பாத்திரங்களுக்குப் பணத்தை வாங்கி கல்லாப்பெட்டியில் வைப்பதுமாய் இருந்தது. அந்த சமயத்தில் ஒரு மனிதன் ஒரு பழைய துணிமூட்டை ஒன்றை தன் தோளின்மேல் தொங்கவிட்டவனாய் அந்தக் கூட்டத்தோடு நின்றுகொண்டு இந்த பழைய துணிமூட்டையை கடைக்குள்ளே வைத்துவிட்டு போகிறேன், பக்கத்தில் ஒரு வேலை இருக்கிறது, ஒரு நிமிஷத்தில் வந்து எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லுகிறான். நான் வியாபாரத்தில் மிகக்கவனமாயிருந்தபடியால் அவன் சொன்ன வார்த்தையை சரியாய் மனதில் எடுத்துக் கொள்ளாதபடி சரி என்று சொல்லுகிறேன். சிறிது நேரத்தில் கடையில் கூட்டம் குறைந்தவுடன் கடைக்குள் திரும்பிப் பார்க்கிறேன். கடைக்குள் பாத்திரம் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ரேக் முழுவதும் ஒரு பாத்திரம் கூடஇல்லை. ரேக் முழுக்க சின்னச்சின்ன பழையதுணி மூட்டைகளாய் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது.

*கடைக்குள் வேறு எந்தப் பொருளும் வைக்க முடியாதபடி கடைமுழுவதும் பழையதுணி மூட்டைகளாய் நிரப்பப்பட்டிருந்தது.*

இதற்கு ஆண்டவரிடம் ஜெபித்து விளக்கம் கேட்டேன். பரிசுத்த ஆவியானவர் என்னோடு இடைப் பட்டுப் பேசினார்;

| | | |
|---|---|---|
| பாத்திரக்கடையில் உள்ளேயிருக்கும் ரேக்குகள் | : | உன் இருதயம் |
| பாத்திரங்கள் | : | உன் புதிய அனுபவங்கள் |
| பழைய துணிமூட்டையை கொண்டு வந்தவன் | : | சாத்தான் |
| பழைய துணியானது | : | பழைய பாவ வாழ்க்கை |

என்பதாக ஆவியானவர் விளக்கினார். இந்த உலகத்தில்தான் நீ வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்பதை நினைவில் கொள். இரட்சிக்கப்பட்டு அபிஷேகம் பெற்று ஊழியம் செய்ய ஆரம்பித்தவுடன் சாத்தான் நிரந்தரமாக உன்னை மறந்துவிடுவான் என்று நினையாதே. மீண்டும் திரும்பிவருவான். உன் ஆத்துமாவுக்குள் ஊடுருவ வேறுவழி எங்கேயிருக்கிறது என்று தேடி உன் ஆத்துமாவுக்குள் இருக்கிற கிறிஸ்துவின் ஜீவனை வெளியேற்ற உன் மாம்சத்தில் போராட்டத்தைத் துவக்குவான். இயேசுவின் இரத்தம் உன் ஆத்துமாவை எப்பொழுதும் மூடி கழுவ ஒப்புக் கொடுக்க வேண்டும் என்றார்.

என் அன்பின் பரிசுத்த ஆவியானவர் என் மேல் இரக்கங்கொண்டு இதை வெளிப்படுத்தி, எனக்கு ஆலோசனை சொன்னார். எனக்கன்பானவர்களே, அவரை நான் எப்படி மறக்கமுடியும், மெய்யாகவே அவர் நம் மேல் கரிசனையுள்ளவரும், நம்மை பாதுகாக்கிறவருமாயிருக்கிறார் என்பது தெளிவு.

கர்த்தர் தம்முடையவர்களைக் காப்பாற்றுவதற்கு எந்தவிதத்திலாவது பேசுவார், ஆனால் நாம் அவருடைய குரலுக்கு செவிகொடுத்து கீழ்ப்படியும் போது அவருக்குள்ளாக பாதுகாக்கப்படுவது நிச்சயம். கட்டாயம் நாம் அவரை விசுவாசிக்கவேண்டும். நம்முடைய சரீரத்தை இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுக்கும்போது அது கிறிஸ்துவைப்போல் மாறுகிறது. வேதம் சொல்லுகிறது:

**‘‘உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயங்களை வேசியின் அவயங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே.**

**வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா? இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொல்லியிருக்கிறதே.**

**அப்படியே கர்த்தரோடு இசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.**

**வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.**

**உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர் களல்லவென்றும் அறியீர்களா?**

**கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே ; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துங்கள்’’. (I கொரி. 6:15-20)**

## எச்சரிக்கை

**"சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்". (எபி. 3:12)**

## 6. பிசாசை எதிர்கொள்ளும் ஆவிக்குரிய பட்டயம்

யோவானுக்கு வெளிப்படுத்திய காரியங்களைப் பாருங்கள்:

**''சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினது மான விசேஷம்.**

**இவன் தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான்''. (வெளி. 1:1,2)**

அப்போஸ்தலனாகிய யோவானுக்கு அந்த நாட்களில் இருந்த ஏழு சபைகளின் போதகத்தில் உள்ள குறைவுகளைக் குறித்து தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்து, இவர் தம்முடைய தூதன் மூலமாக சபை விசுவாசிகளைக் குறித்து விசுவாசிகள் தவறு செய்ய இடங்கொடுக்கிறாய் என்று சபை ஊழியர்களைக் கடிந்துகொண்டார்.

**''ஆகிலும், சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்த வைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணு வதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளு கிறவர்கள் உன்னிடத்திலுண்டு''. (வெளி. 2:14)**

**“நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்”. (வெளி. 2:16)**

ஆவியானவர் சொல்லும் பட்டயம் அரிவாள், கடப்பாறை, ஈட்டியல்ல. வேத வசனமாகிய பட்டயம்.

**“தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது”. (எபி. 4:12)**

**கர்த்தர் பயன்படுத்தும் பட்டயம் அவருடைய வார்த்தை.** *ஒரு சமயம் அசுத்தஆவியை விரட்டுவதற்காக என்னை ஒரு சகோதரன் அழைத்துக்கொண்டு போனார். நான் ஜெபிக்கத் துவங்கிய உடன் அந்த மனுஷனுக்குள்ளிருந்த அசுத்த ஆவி என்னோடு பேசியது. நான் இவனுக்குள் பத்து வயதிலிருந்து இருக்கிறேன். நான் இவனைக் கொல்லாமல் இவனை விட்டுப்போகமாட்டேன் என்று சொல்லிவிட்டு, நானே மரணத்துக்கு அதிகாரி என்று அந்த ஆவி அவனுக்குள்ளிருந்து பேசியது. உடனே இயேசுவை நோக்கி நான் ஜெபம் பண்ணினேன். பரிசுத்த ஆவியானவர் மூலம் இயேசு என்னோடு பேசினார்.*

*“...நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;” (யோவான்.11:25) என்ற வார்த்தையைச்*

*சொல்லி இயேசுவின் நாமத்தில் இவனை விட்டு வெளியேறு என்று கட்டளை கொடு என்றார். நான் அப்படியே சொல்லி பிசாசுக்கு கட்டளை கொடுத்தேன். பிசாசு அவனை விட்டு வெளியேறியது.*

பிரியமானவர்களே, அசுத்த ஆவியை பரிசுத்த ஆவியானவர்தான் விரட்ட முடியும். மனுஷீக தந்திரத்தால் விரட்டமுடியாது. இயேசு ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட உடன், ஆவியானவரின் அனுமதியுடன் இயேசுவை பிசாசு பல விதத்தில் சோதிக்கிறான். அதில் முக்கியமான சோதனை உலகத்தின் இச்சை.

**"மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங் களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:**

**நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்". (மத்.4:8,9)**

பிசாசை எதிர்கொள்ளும் பட்டயம் தேவனுடைய வார்த்தையாகிய இயேசு. இயேசுவைக் கண்டால்தான் பிசாசு பயப்பட்டு விலகி ஓடுவான். இயேசு யார் என்பதை வேதம் சொல்லுகிறது:

**"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனா யிருந்தது.**

**அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.**

**சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டான தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை". (யோவான். 1:1-3)**

தேவனின் வார்த்தையாகிய இயேசுவின் மூலம் உலகத்தில் எல்லாம் உண்டாயிற்று என்பதை ஆதியாகமம் முதலாம் அதிகாரம் முப்பத்தோரு வசனங்களும், இரண்டாம் அதிகாரத்தில் ஒன்று இரண்டு மூன்று வசனங்களும் நமக்குத் தெளிவாய்த் தெரிவிக்கிறது. இப்படியிருக்கும் போது சாத்தான் எப்படி இந்த உலகத்திலுள்ளவைகளுக்கு உரிமை கொண்டாட முடியும்?

நமது முன்னோர்களான ஆதாம் ஏவாளின் மாம்ச சுபாவம் இயேசுவில் இருந்தபடியால் இந்த பரீட்சையை பிசாசு இயேசுவுக்கு வைத்தான். காரணம், இயேசு நூறு சதவீதம் மனுஷனாயிருந்தபடியால், மனுஷசுபாவத்தின் மேல் அந்தச் சோதனையைக் கொண்டுவந்தான். இயேசு தன்னைக் குறித்து தெளிவாய் அறிந்திருந்த படியால் பிசாசிடம் சொல்லும்போது, அவருக்குள்ளிருக் கும் தேவ சுபாவத்தை ஆராதிக்க வேண்டிய பிசாசு தன்னை விழுந்து பணிந்து கொள்ளச் சொன்ன படியால், ஆவியின் பட்டயமாகிய வேத வசனத்தை உபயோகித்தார்.

**“அப்பொழுது இயேசு : அப்பாலே போ சாத்தானே ; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதி யிருக்கிறதே என்றார்” (மத். 4:10)**

இயேசுவுக்கு முன்பாக விழுந்து பணிந்து கொள்ள வேண்டிய சாத்தான், இயேசுவைப் பார்த்து என்னைப் பணிந்து கொண்டால் உலகத்திலுள்ளவைகளை யெல்லாம் உமக்குத் தருவேன் என்று ஏமாற்ற முயன்றான்.

*மீண்டும் ஒரு விசை பிசாசை துரத்தச் சென்ற போது பிசாசு பிடித்த மனிதனுக்குள்ளிருந்த அசுத்தஆவி என்னைப் பணிந்து கொள், இந்த பூமியிலுள்ள சகல ஆசீர்வாதங்களையும் உனக்குத் தருவேன் என்றான். நான் இயேசுவை நோக்கி ஜெபித்தேன். ஆவியானவர் பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது என்பதை என் இருதயத்திற்குள்ளிருந்து பேசினார்.*

*நான் உடனே அந்த ஆவியைப் பார்த்து பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. இந்தப் பூமியில் உனக்கென்று ஒன்றுமில்லை, எல்லாம் தேவனுடையது. உன்னால் எதுவும் கொடுக்கவும் முடியாது, தேவன் கொடுத்த எதையும் உன்னால் எடுக்கவும் முடியாது என்று சொல்லி நீ இயேசுவால் தோற்கடிக்கப்பட்ட பிசாசு. உன் முதுகெலும்பை இயேசு சிலுவையிலே ஒடித்து விட்டார். நீ முதுகெலும்பு ஒடிக்கப்பட்ட பாம்பு. பேசாமல் இவனை விட்டு வெளியேறு என்று கட்டளை கொடுத்தேன். பிசாசு அவனை விட்டு வெளியேறியது.*

எனக்கன்பானவர்களே, இயேசுவை ஏமாற்ற நினைத்த பிசாசு இப்பொழுது இந்த உலகத்தையே ஏமாற்றி ஆண்டு கொண்டிருக்கிறான். பாவம் செய்த ஒவ்வொரு மனிதனுடைய ஆவியையும் பிசாசு தன்னுடைய இச்சையின் எண்ணங்களால் நிரப்பி தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான். கலாத்தியர் ஐந்தாம் அதிகாரத்திலுள்ள பத்தொன்பது, இருபது, இருபத்து ஒன்று வசனங்களில் பிசாசின் குணங்கள் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனின் ஆவியிலும் மேலே சொல்லப்பட்ட வசனங்களின் கிரியைகளினால் பாவங்களைச் செய்யச்செய்து ஆண்டு கொண்டு

வருகிறான். அதனால்தான் பிசாசை உலகத்தின் அதிபதி என்று வேதம் சொல்லுகிறது. சாத்தானின் ஆட்சியும் அதிகாரமும் இந்தப் பூமியிலே எப்படி யிருக்கிறதென்பதை கீழே உள்ள வேதவசனம் தெளிவுபடுத்துகிறது.

**“மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது”. (வெளி. 17:5)**

**“ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி; நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம்பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே;**

**அவளுக்கு வருகிற ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேன் என்று சொல்லி;**

**ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டு போனான்...” (வெளி. 17:1-3).**

வேசித்தன ஆவிகள்தான் இப்பொழுது பூமியில் மனிதர்கள் மூலமாக ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. வனாந்தரம் என்பது காணக்கூடியவைகள் அல்ல. மாம்சக் கண்களால் பார்க்கக்கூடாத ஒரு நிலை அல்லது அனுபவம். அப்போஸ்தலனாகிய யோவானுக்குக் கர்த்தர் கடைசிக் காலங்களில் நடக்கும் சம்பவங்களையும், பூமியின் குடியிருக்கிறவர்கள் மேல் கிரியை செய்கிற இச்சையின் ஆவிகளைக் குறித்தும் தேவன் வெளிப்படுத்திக் காண்பித்தார்.

**“அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறி கொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப் பட்டேன்”. (வெளி. 17:6)**

அந்த ஸ்திரீ என்பது ஐக்கியம் அல்லது கூட்டம். இதன் தலைமையின் கீழ் செயல்படும் அசுத்த ஆவிதான் ஆவியானவர் இடங்கொடுத்தபொழுது. இயேசுவிடம் உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, என்னைப் பணிந்து கொண்டால் இவைகளை யெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னது.

இந்த ஆவிகள் இன்று பூமியிலே ராஜாக்கள் மேலும், சகல குடிகள் மேலும் கிரியை செய்து மெய்யான பரலோக மகிமையை மறக்கச் செய்து பாவஞ்செய்யப்பண்ணி, ஒவ்வொரு ஆத்துமாக் களையும் நரகத்தில் தள்ளுகிறது. ஒவ்வொரு மனிதனையும் மாம்சத்துக்குரிய எல்லா ஆசை களையும் தூண்டிவிட்டு அதில் சிக்கிக்கொள்ளச் செய்கிறது. பின்பு மரணத்தை நோக்கி நடத்திச்சென்று தற்கொலை செய்யப்பண்ணுகிறது. இதன் மூலம் இந்த ஆவிகள் தங்கள் ஆசையை தீர்த்துக்கொள்ளுகிறது. இப்பொழுது இந்த ஆவிகள் தான் உலகம் முழுவதும் வியாபித்திருக்கிறது.

**''பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே ; அவைகள் ஜனங்களும், கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்''. (வெளி. 17:15)**

இந்தத் தரிசனத்தை அப்போஸ்தலனாகிய யோவானுக்குத் தேவன் தமது தூதன் மூலமாகக் காண்பித்தார். இந்த நாட்களில் ராஜ்யங்கள் மேலும், ராஜாக்கள் மேலும், தேசங்கள் மேலும், மாநிலங்கள் மேலும், நகரங்கள் மேலும், கிராமங்கள் மேலும், வீடுகள் மேலும், ஒவ்வொரு தனி மனிதர்கள் மேலும் அமர்ந்திருந்து இந்த ஆவிகள் சாத்தானின் திட்டத்தை பூமியிலே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

## எச்சரிக்கை

**''ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்''. (யாக். 4:7)**

# 7.இயேசுவின் வருகையை எதிர்கொள்ளும் விசுவாசத்தின் ரகசியம்

எனக்கருமையான சகோதரனே, சகோதரியே இந்த ஆவிகளின் கிரியைகளுக்கு கட்டாயம் நாம் தப்ப வேண்டும். வேதம் சொல்லுகிறது:

**“தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்”. (1யோவான் 5:4)**

பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்பு அவர் நமக்குள்ளே இருக்கிறார் என்கிற நிச்சயமே நமக்கு இந்த ஆவிகள் மேல் வெற்றியைக் கொடுக்கிறது. அதாவது

**‘‘விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்”. (எபி. 11:6)**

**‘‘விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது’’. (எபி.11:1)**

இரட்சிப்பு என்பது அதாவது பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறோம் என்பதின் நிச்சயம் நமக்குள் இருக்கவேண்டும். நம்முடைய பழைய பாவம் மற்றும் நம்முடைய முன்னோர்களின் பாரம்பரியம் முற்றிலுமாக இயேசு கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டு மரித்து விட்டது என்ற நிச்சயத்தை நமது

மனம் நமக்கு சாட்சி கொடுக்கவேண்டும். அப்பொழுதுதான் இயேசு எனக்காக சிலுவையில் அறையப்பட்டு மரித்தார். நானும் அவருடைய சரீரத்துடன் இணைந்திருக்கிறேன்.

நான் பாவத்தில் இருந்தபொழுது பிசாசுடன் இணைந்திருந்தேன். இப்பொழுது அந்த என்னுடைய சரீரம், இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்டு மரித்து இணைந்துவிட்டது என்று நம்முடைய மனம் சாட்சி கொடுக்கவேண்டும். இப்பொழுது வேதம் சொல்வதைக் கவனியுங்கள்:

**‘‘பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?**

**கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?**

**மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்.**

**ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.**

**நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய**

மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்ட தென்று அறிந்திருக்கிறோம்.

மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே.

ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை யென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டு கொள்வதில்லை.

அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத் திருக்கிறார்.

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்த வர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர் களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.

ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக''. (ரோமர். 6:2-12)

''ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப் படுவீர்கள்.

**ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்.**

**இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும்''. (கொலோ. 3:3-6)**

பிரியமானவர்களே, இயேசு சீக்கிரம் தம்முடைய இரத்தத்தினால் பாவத்தின் பிடியிலிருந்து மீட்ட ஜனங்களாகிய தம்முடைய பிள்ளைகளை இந்த உலகத்திலிருந்து பரலோகத்திற்கு அழைத்துச் செல்ல வருவார் என்று வேதம் சொல்லுகிறது. அவருடன் செல்லவேண்டுமானால் பரிசுத்தம் தேவை.

**"முதலாவது நீங்கள் அறியவேண்டியது என்னவெனில்: கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து,**

**அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்.**

**பூர்வகாலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினின்று தோன்றி ஜலத்தினாலே நிலைகொண்டிருக்கிற பூமியும் உண்டாயினவென்பதையும்,**

**அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்.**

**இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்**

பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. (II பேதுரு 3:3-7)

“கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்''. (II பேதுரு 3:10)

‘‘ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லா தவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்”. (II பேதுரு 3:14)

## எச்சரிக்கை

“பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை”. (மத்.7 : 21)

## முடிவுரை

பிரியமானவர்களே, இந்த உலகத்திற்குத் தேவன் நியமித்திருக்கிற நாட்கள் முடிவுக்கு வந்துவிட்டது என்பதை நாம் எல்லோரும் வெளிப்படையாகவே காண்கிறோம்.

மனிதனின் இயந்திரமயமான வாழ்க்கை, வேலையில்லா திண்டாட்டம், எங்கு பார்த்தாலும் விபச்சாரம், வேசித்தன பெருக்கம், பொய் சொன்னால் தான் உலகத்தில் வாழமுடியும் என்கிற நிலை, எல்லாம் பொய் எதிலும் பொய், மனித நேயமற்ற செயல் இப்படி தேவச்செயலுக்கு விரோதமான சாத்தானின் கோரத் தாண்டவம் பூமியிலே பெருகி வருகிறதைக் கண் கூடாகக் காண்கிறோம். நிச்சயமாகவே இவைகளின் மேல் தேவ கோபாக்கினையான நியாயத்தீர்ப்பு நெருங்கிவிட்டது. ஆகையால், இதற்குத் தப்பித்துக் கொள்ள சிலுவையண்டையில் கூடுவோம். இயேசு கிறிஸ்துவின் மூலம் நித்திய இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ளுவோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!.